விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey.
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௪] யாழ்ப்பாணம்:- நந்தன ஆு மாசிமீ ௧௨ உ செவ்வாய்க்கிழமை (24 Feb. 1953) [இல - ௮௬]

# தேடிக் கண்டுகொண்ட தொண்டர்

## அவரது உள்ளக் கிடக்கை

### இறைவனைக் கண்டது எங்கு?

சைவநெறியே, 'சேரைச் செந்நெறி' 'தேவதேவன் திருநெறி' 'முன்னெறி' 'சேமநெறி' 'அருணெறி' முதலிய தொடரால் உண்மை அருள் நூல்கள் உணர்த்துகின்றன.

இவ்வுயர்நெறியிற் சென்று கடவுளைக்கண்டு, காணவிரும்புவர்ர்க்குக் கருணைப்பெருக்கால் உணர்த்திய ஆசாரியர் பலரையும் முற்காலத்தார்போல இக்காலத்தார் போற்றியும் பயனடைந்தும் உய்திபெற்றிலர். மக்கள் கோயில்வழிபாடு முதலிய சமயச்சார்பான கிழ்ச்சிகளில்மெய்ம்மையைத்தோற்றிநிற்கின்றாரல்லர். போலி வழிபாடும் போலியொழுக்கமும் ஆகஇருப்பது அறிஞரை வருத்தும் என்பதில் ஐயமில்லை.

"புண்ணியம் மேல்
நோக்குவிக்கும்
பாவம் கீழ்நூக்கும்"
(தன்ளும்)

என்பது சிவாகம வாய்மையுரை.

கடவுளை மூர்த்தி, தலம், தீர்த்தங்களிற் கண்டு வழிபடுதல் இன்றியமையாததேயாகும். ஆயினும், அவற்றின் பயனாகிய உண்மையைக் காண்பதும் காணமுயல்வதும் அதனினும் இன்றியமையாதன. திருதிருமுறையாசிரியர் எதையும் அரைகுறையாகச் செய்யும் பெற்றியரல்லர். நிறைவுற்றதாகவே அவர்செயல் இருந்தது. நமக்கும் அதையே வற்புறுத்தினார்கள். மனம் வாக்குக் காயம் மூன்றாலும் கடவுளை வழிபடல் வேண்டும். மனத்தின் நினைப்பும் வாக்கின் பாட்டும் காயத்தின் வணக்கமும் பூரணமாக இருத்தல் வேண்டும். இவ்வுண்மையை மேற்கொள்ளாதவர் வழிபாட்டின் முழுப்பயனை அடைவது அரிது.

சித்தமாரத் திருவடியே நினைந்து உள்கி எழுவார் உள்ளமேயவன்' என்றார் நெஞ்சத்தின் நினைவை. இதனால் நினைக்கும் வினையை அரைகுறையாகச் செய்யாமல் ஆர நிறையச் செய்தல்வேண்டுமென்றதறிக.

'வாய்ஆரத் தன் அடியே பாடுந்தொண்டர் இனத்தகத்தான்' என்றதிலும் 'நாவாரநம்பனையே பாடப்பெறாரேம்' என்றதிலும் வாக்கின் செயலின் முழுமை = நிறைவு உணர்த்தப்பட்டது.

'தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச் சங்கரா சய போற்றி போற்றியென்றும .... அலறுகில்' என்ற காயத்தின் பூரண நமஸ்கார கிருத்தியம் வற்புறுத்தப்பட்டது.

திருவிசைப்பாவில், 'அன்று முதல் இன்றுவரை கையாரத் தொழுது அருவி கண்ணூரக் சொரிந்தாலும் செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே' என்று உருகிப் பாடியருளினார்.

... ஞானசம்பந்தம் ...

கடவுளைக் காண விரும்புவோர்க்கு இத்தகைய திரிகரண பூரணமாகும் அத்தியாவசியமானது. அவர்க்கே கடவுள் இருக்குமிடம் எளிதில் விளங்கும். 'நாடோறும் நவின்று ஏத்தாய் நன்மை ஆமே' என்றார் நம் அப்பர், எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்த மாணிக்கவாசகர் 'பரம்பரனைப் பணியாதே எத்தனையோ காலம் எல்லாம் பாழுக்கிறைத்தேன்' என்று வருந்தினர். அழகாய கழலான் அடிநாளும் கழலாதே விடல் இன்றித் தொழலார் அவர்தாளும் துயரின்றித் தொழுவாரே' என்றருளினார் திருஞானசம்பந்தர். 'நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்து உன்னைப், பேயாய்த் திரிந்து எய்த்தேன், பெறலாகா அருள் பெற்றேன்' என்றருளிய சுந்தரப் பெருமாளும், 'நல்லதன் நலனும் தீயதன தீமையும் இல்லையென்போர்க்கு இனன் ஆகிலியர் என்ற புலவரும், "உலகத்தார் உண்டென்பதில்லென்பான் வையத்தலகையாவைக்கப்படும்" என்ற திருவள்ளுவரும் வெளிப்படையாயும் குறிப்பாயும் கடவுளை வணங்காதவரையும் மறுப்பவரையும் வானில உலவும் ஆற்றலின்றித் தரையில் திரியும் பேய்கள் என்று தெரிவித்த உண்மை அறிஞர்க்கு விளங்கும்.

கடவுளை வெளியே தேடிப் பொழுது போக்க நம்மைத் தூண்டவில்லை. உள்ளேயே தேடிக்காண வற்புறுத்தியுள்ளனர்.

திருஞானசம்பந்தர் 'ஈசனை எம்பிரானை விரும்பி வழிபட்டால் ஆவியுள் நீங்கலான்' (திருக்கலிக்காமூர் ந) என்றும் 'பாவிகள் சொல்லைப் பயின்று அறியாப் பழந்தொண்டர்கள் உள்ளுருக ஆவியுள் [illegible] அருள் செய்யவல்ல [illegible] இடம்,,,,வலம்புரநன்னகரே'

(10) என்றும் கடவுள் நீங்காது நிற்கும் இடத்தைக் காட்டியருளினர். மாபரன் தாபரம் சங்கமங்கள் என்றிரண்டுருவின் நின்றும் பூசைகொள்ளும் இடத்தையும் உடன் கூறியருளிய உண்மையை மறத்தல் கூடாது.

திருநாவுக்கரசர் 'பக்தர்கள் சித்தத்துட்புக்குத் தேடிக் கண்டு கொண்டேன்' என்று திருவாரூரிற் குறித்த பொருத்தத்தினை 'அடியாருடன் நாம் இருப்பது' என்ற தியாகராசனன்றி அறிவார் எவர்? 'பத்தர்கள் சித்தத்துள் புக்குத் தேடிக் கண்டுகொண்டேன்' என்றும் படர்க்கையிற் கண்ட அதே காட்சியைத் தன்மையிலுங் கண்ட உண்மையைச் சொல்லாது விட்டாரோ! 'ஒருவரும் ஈங்கு அறியாவண்ணம் என் உள்ளத்துள்ளே ஒளித்துவைத்த சிறையானைத் திருநாகேச்சரத்தானைத்' தேடிககண்டுகொண்டேன்-திருமாலொடு நான்முகனும தேடித் தேடொணாத் தேவனை என

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## ஆதியும் அந்த மாயினுய் போற்றி...!

திருச்சிற்றம்பலம்.

உடைய நாதனே போற்றி நின்னலாற்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னேபணி போற்றி யும்பரார்
தம்பராபரா போற்றி யாரினுங்
கடைய னயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
அடிய னக்கினாய் போற்றி ஆதியும்
அந்த மாயினாய் போற்றி யப்பனே.

திருச்சிற்றம்பலம்.

# இரும்பு மனத்தை உருக்கும் கொல்லன்

## கருவணையினூற் பரமுத்திகொடுக்கும் கடவுள்

தலைவராகிய சிவபெருமான், ஆன்மாக்களுக்குப் பரமுத்தியாகிய சிவானந்தத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் பெருங் கருணையினால் ஒரு கொல்லன் ஆகின்றார். இரும்பு போன்ற மனமுடைய ஆன்மாக்களை உலக போகங்களாம் அக்கினிமயமாய்க் கிடக்கின்ற ஊதும் உலையில் இட்டுக் காய்ச்சுகின்றார். ஓரளவு பதத்துக் காய்ந்தவுடன் எடுத்துத் தனது திருவருளையே நோக்கும்வண்ணம் மனத்தை உருப்படச் செய்ய வேண்டும் என்னும் திருவுள்ளத்தோடு அடிக்கின்றார், அதாவது உலகவிஷயங்களாம். அக்கினியினால் வெந்துகிடக்கின்ற மனத்தைத் தன்னையே நோக்கும் பான்மையுடைத்தாகிய அந்தப் பக்குவத்தை உண்

அளவைச் சிவனடியார்
வரைவது

டாக்குகின்றார். "இவ்வளவில் விஷயம் முடிந்துவிடவில்லை." ஒரு முறை காய்ச்சி அடித்த மாத்திரத்திலேயே அவ்விருப்பு மனத்துக்கு அவரை நோக்கும் வண்ணம் ஏற்பட்டு விடாது. நோக்கிற்றை நோக்குதலாகிய தன் தன்மையைக் காட்டியே நிற்கும் அம்மனம். இந்நிலையில் அத்தலைவராம் கொல்லன் மேலும் மேலும் உலக விஷயங்களாகிய போகங்களைக் கொடுத்து அவற்றைப் பொசிப்பித்துத் தொலைத்து, ஆன்மாவைப் பற்றி இருக்கும் பாசங்களின் வலியை அடித்துத்தகர்த்து, அப்பாசங்களில் நீங்கித் தன்னையே நோக்கும் வண்ணம் செய்கின்றார். கொல்லன் தான் வேண்டிய உருவம் அமையுந் துணையும் இரும்பை மேன்மேலும் காய்ச்சி அடித்தல் தன்பொருட்டென்றும், ஆன்மநாயகராம் கொல்லன் மனமாகிய இரும்பை அவ்வாறு பண்படுத்தல பிறர்பொருட்டென்றும் அறிக.

**படிமுறையாக இரட்சித்தல்**

இந்நிலையில் நாம் சிந்திக்கக் கூடியது ஒன்றுண்டு. தலைவ

தொடர்ச்சி 3-ம் பக்கம்

அரசியல் அலை

# புகையிலை வர்த்தகத்தில் நெருக்கடி

## சமாளிப்பதற்குத் தூதுக் குழு

### உணவு மந்திரியின் ஞானோதயம்

யாழ்ப்பாணப் புகையிலைத் தொழிலுக்குப் பேராபத்து வந்துகொண் டிருக்கிறதெனப் பல ஆண்டுகளாகப் பேசிக்கொள்கிறார்கள். இந்த நிலைமையைச் சீர்ப்படுத்த வழிவகை எடுப்பதற்காகப் பலவாறாக முயற்சிகள் செய்யப்பட்டும் பயன்கிடைத்தபாடில்லை.

இப்பொழுது உணவு மந்திரிக்கு ஞானோதயமாகி இந்திய அரசாங்கத்தைக் கண்டு இந்நிலைமைக்குப் பரிகாரம் தேடுவதற்காக ஒரு தூதுக் குழுவை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக அறிகின்றோம்.

இலங்கை அரசியற்றந்திரத்தில் முதற்படி தூதுக்குழு அனுப்புதல், விசாரணைக் குழு அமைத்தல் முதலியனவே அவ்வாறு இப்பொழுதும் அமைச்சர் திரு. சு. நடேசன், பாராளுமன்றக் காரியதரிசி திரு. வே. குமாரசுவாமி ஐக்கிய புகையிலைச்சங்கத் தலைவா [illegible] காரி திரு. R. C. S. குக் ஆகியோர் கொண்ட ஒரு தூதுக் குழு இந்தியப் பிரதமரைக் காணச் செல்லுமாம்.

இந்திய நல்லெண்ணத்தைப் பெற வழிகள் பலவுள. இலேசான முறை இந்திய அரசாங்கத்துக்கு அடிக்கடி தலையிடி உண்டாக்காது விடுவதே. இலங்கை இந்தியர் வகையில் இலங்கை அரசாங்கம் நல்லெண்ணம் காட்டச் சித்தமாயிருந்தாற் புகையிலைத் தூதுவர்களும் சித்திபெறக் காத்திருக்கலாம்.

உணவுப்பகுதி அமைச்சர் இலங்கை இந்தியர் தகராற்றையும் இல்லாது தீர்ப்பதற்கு முன்வருவாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

இந்துசாதனம்

யாழ். நந்தன ௵ மாசி மூ கஉ செவ்வாய்க்கிழமை

## இலங்கைப் போர்?

—0—

உணவுப் பகுதி அமைச்சர் என்றுற் சொல்லவேண்டியதில்லையே. சொல்லணி பெறப் பகுத்துப் பொருள்பட உரைக்கும் அரசியல் நுண்ணறிவு படைத்தவர் இரண்டாவது உலக யுத்தத்தின்போது மாநிலமெங்கும் உணவுப் பஞ்சம் உக்கிரமாகப் பரவி வரும் வேளையில் ஒருவரேனும் பசிப் பிணியால் வாடி மடியாப் புகழை இத் தீபகத்திற்கு அளித்த பெருமையுடையர். ஆனல் வாக்குத் திறனை எவ்வளவு காலம் இடரைப் போக்கலாம்? சேர். ஒலிவர் குணதிலகவுக்குமே உளக் களைப்பை உண்டுபண்ணும் நெருக்கடி வேளை இப்போது இருக்கின்றது. எனினும் இந்த அமைச்சர் சாவகச்சேரியில் உழவு இயந்திரங்களின் வேலைக் காட்சியைத் திறந்துவைக்கும்போது இலங்கைப் போர் ஆரம்பித்து விட்டதென்றும் அதை வெல்ல உள்நாட்டுணவு உற்பத்தியைப் பெருக்குவதே பொருத்தமான ஆயுதமென்றும் அழகாகச் சோடித்துச் சொல்லினர். நன்றிகூறு முகத்தாலுரைசெய்த அத்தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வே. குமாரசுவாமியவர்கள் 'வேண்டிய உபகரணங்களைக் கொடுத்தால் யாழ்ப்பாண மக்கள் இப்போரில் வெற்றியீட்டிக் கொடுப்பார்கள்' என்று வன்மைபெறப் பேசினர்.

ஆண்டிகள் மடங்கட்டுவதுபோல ஆண்டுக் கூட்டங்களிலும் வேறு கொண்டாட்டங்களிலும் இவ்வாறு கற்கண்டோ தேனே என்னக் கேட்போர் வாயூற அமைச்சர்கள் சொற்பெருக்காற்றிவிட்டாற்போதாது. திரு. குமாரசுவாமி அவர்கள் நுட்பமாகக் குறிப்பிட்டவாறு உபகரணங்களையும் உற்பத்திக்கான வசதிகளையும் உண்மையான முறையில் அரசாங்கம் மக்களுக்குக் கொடுத்துதவுமேயானுற் பயன் பெறுவது முடியாத காரியமாகுமா? குடியேற்றத் திட்டம் என்று நெடுங்கதை பேசுகின்றது அரசாங்கம். ஒருகுழிக் காணியேனுமில்லாத ஏழைக் கமக்காரனே அல்லது இடைத்தர இயல்புடையவரோ ஒருவர் குடியேறுவதற்கு நிலங் கேட்டால் அரசாங்க விதிகள் நடைமுறைகள் என்றவைகயில் முட்டுக்கட்டைகள் தோன்றிவிடும்! இவர்கள் இந்தவிதமாக இலங்கைப் போரை ஆடலாமென்று உணவுப்பகுதி அமைச்சர்களுக் காண வேண்டியதுமில்லை! தூதுக் குழுக்கள் நல்லெண்ணக்கூட்டத்தார் வெளியூர் அரசாங்கப் பிரதிநிதிநிலையங்கள் என்றவற்றை அமைப்பதிலும்—அவற்றிற்கு அளவு கடந்த பொருளை விரயஞ் செய்வதிலும் எவ்வளவு ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் உண்டோ அவ்வளவுக்கு உணவுப் பொருள் விருத்தியில் அரசாங்கம் உண்மையான முயற்சி எடுக்குமேயானல் இலங்கைவாழ்மக்கள் பசிப் பிணிப் பெரும் போரில இறைவன் அருளால் எளிதில் வெற்றிபெறுவரென்பதை அமைச்சர்கள் அறிவார்களாக.

# அரிசியும் மாவும் தாராளமாயுண்டு

## விலையுங் குறைகின்றது

மக்களிடையே ஒரு வீண் பரபரப்பை உண்டு பண்ணிக் கள்ள வியாபாரக் கூட்டத்தவர்கள் செய்த சதி ஒருவாறு அழிகின்றது. விளைவு காலமானையாலும் போதிய நெல் அரிசிக் குவியல்கள் அரசாங்கத்திடமிருப்பதாலும் உணவுப் பொருள் நெருக்கடி இல்லை என்று மக்கள் உணர்ந்து விட்டார்கள்.

### அதிக விலை கொடுத்து அரிசி பெறவேண்டாம்

யாழ்ப்பாணப் பகுதியிற் சுற்றுப் பிரயாணஞ் செய்த உணவுப் பகுதி மந்திரியார் அரிசப் பஞ்சம் இல்லை என்று திட்ட வட்டமாகக் கூறியுள்ளார்

# எல்லாக் கல்வியும் தமிழில் ஊட்டலாம்

## ஆசிரியர்கள் நன்முயற்சி வேண்டும்

### பேராசிரியர் T. P. மீனுட்சிசுந்தரனுர் கருத்து

கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கழக ஆதரவில் "இன்று தமிழ் உதவுமா" என்னும் பொருள்பற்றி சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. T. P. மீனுட்சிசுந்தரனுர் பேசும்பொழுது "பல்கலைக் கழகக் கல்விக்கும், அரசியற் கருமங்களுக்கும் இன்று தமிழ் உதவுமா என்று நாம கேட்பது போல பிறெஞ்சு நாட்டில் பிறெஞ்சுமொழி உதவுமா வென்றோ ஜெர்மனியில் ஜெர்மன் மொழி உதவுமாவென்றோ கேட்டதேயில்லை" "ஆரம்பக் கல்வியைப் பொறுத்த மட்டில் இந்தக் கேள்வி எழவில்லை. பல்கலைக் கழகக் கல்விபோன்ற மேற்படிப்புக்கு வந்தபோது புதிய விஞ்ஞான, வைத்திய, பௌதிக சாத்திரக்கலைச் சொற்களை ஆங்கிலத்திற் பார்த்த மாத்திரத்தில் திகைப்பும் குழப்பமும் உண்டாகின்றன. ஜப்பான், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நவீன விஞ்ஞான சாத்திரக் கலைச் சொற்களைச் சுத்தமாக அப்படியே மொழி பெயர்த்துவிட வேண்டுமென அவர்கள் எண்ணுவதில்லை. விஞ்ஞானக் கலைச் சொற்களை மொழிபெயர்க்க எண்ணுவது கூடாதகாரியமுமாகும். ஏனெனில் மின்சார சம்பந்தமாக உபயோகிக்கப்படும் "வோல்ட்" என்ற மொழியைப் போன்ற எத்தனையோ விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்குக் கண்டுபிடித்தவர்களின் பெயர்களே இடப்பட்டிருக்கின்றன. ஆட்களின் பெயர்களை மொழிபெயர்ப்பதெப்படி? விஞ்ஞானக் கலைச் சொற்களெல்லாம ஒவ்வொன்றைக் குறிப்பிடும் குறியீடுகள் போன்றவை" என்று கூறினர்.

ஆசிரியர்கள் நன்கு முயல்வரேயானுல் எல்லாவற்றையுந் தமிழிற் கற்பிக்கலாமென்றும் இங்ஙனம் செய்வரேல் எம்பிற்சந்ததியார் இவ்வித ஐயவினா எழுப்பவேண்டியதில்லை யென்றும இவை படிப்படியாகவே செய்ய வேண்டிய கருமங்கள் என்றும் மேலும் வேண்டிய விளக்கங்கள் கூறினர்.

# அணிந்துரை அரங்கம்

### திருவாசகப் பேருரை

திருவாசகப் பேருரையொன்றை உலகியல் விளக்க நூலாசிரியர் மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனர் என்னும் பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள் கலையுலகு களிப்பெய்த இயற்றியுள்ளார்கள். அதன் முதற்பகுதியாகிய சிவபுராணப் பேருரையை, திரு. ஞ. பூரணனந்தா (B A; Hons Lond) அவர்கள் தமிழன்பர்களுடைய ஆதரவை நாடிப் பார்வைப் பிரதியாக அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர்.

தேவார திருவாசகங்களுக்குத் திருத்திய உரை தருதல் பொருந்தாதென்னு மோர் [illegible] இயம் படைத்த பண்டிதமணி அவர்களின் பேராற்றலிவிருந்து ஊற்றெடுக்கும் அரிவுரைகளைக் கண்டு மகிழத் தமிழன்பர்கள் விழைவரென்று நம்புகின்றோம்.

இறைவழிபாட்டில் நின்று அவனருளாலே அவன் புராண உரை செய்ய வந்த பண்டிதமணி முன்னுட் பலப்பல நூல்களியற்றித் தமிழ்த் தொண்டாற்றியுள்ளார். இவர்புலமை இவ்வுரைக்கண் உள்ள நுண்பொருளால் அறியக்கிடக்கின்றது.

பெறுமிடர்:
பண்டிதமணி
க. சு. நவநீதகிருஷ்ணபாரதி
அவர்கள
மாவிட்டபுரம், தெல்லிப்பழை

### பூமாலை மலர்கள்

இது, தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல

தொடர்ச்சி 3-ம் பக்கம்

தொடர் கதை

# மரக்கலத்தின் மீது நடந்த வாண வேடிக்கை!

## ஆழிக்குள் ஆழ்ந்த அரசிளங்குமரன்

## ★ நீரர மங்கையர் ★

—5—

அவள் மேற்புறம் வந்து அலையினின்று தலையை உயர்த்தியபோது பொழுது படுகின்ற வேளை. ஆனல் வானத்தில் செக்கர் நிறம் இன்னும அழியவில்லை. அசன் நடுவே மாலை வெள்ளி மிக்க பிரகாசத்தோடு துலங்கிற்று. அவள் வந்து ஏறிய இடத்துக் கருகில் ஒரு பெரிய மரக்கலம் மெல்ல அசைந்து கொண்டிருந்தது. ஒரு பாய் மட்டு அதில் விரித்திருந்தது. காற்றோட்டம் அடியோடில்லை. மாலுமிகள் பாய்மரத்திலும் கயிற்றிலுஞ் சாய்ந்துகொண்டு நின்றனர். கப்பல் மேற்றளத்திற் சிலர் வாத்தியம் வாசித்தனர். சிலர் பாடினர். பின்னர் இருளத் தொடங்கியது. வனுய் விளங்கினன். அவன் ஓர் அரசிளங் குமரன். அவன் கண்கள் கரியன. அவனுக்கு வயது பதினறு இருக்கும். அன்றுதான் அவன் பிறந்த நாள்! அதற்காகவே இவ்வளவு கொண்டாட்டம். மரக்கலத்தின் மேற்றட்டில் மாலுமிகள் கூத்தாடிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தின் பின் அவ் வரசிளங் குமரனும் அங்கு வந்து சேர்ந்தனன். அப்போது அங்கு கொளுத்திய ஆகாய வாணங்களினின்று நூற்றுக்கணக்கான மத்தாப்பு ஒளிர்ந்துகொண்டு வானத்தைக் கிழித்து மேலே எழுந்தன. எங்கும் பட்டப் பகல்போல் ஒரே வெளிச்சம். இதைக் கண்ட சிறுமிக்குப் பயம்வந்துவிட்டது. உடனே தண்ணீருக்குள் தாழ்ந்து விட்டாள். பின்னர் சற்று நேரத்தில வெளியே வந்து பார்த்தபொழுது வானத்திலிருக்கும் வெள்ளி முழுவதும் கீழே வந்து தனக்குச் சுற்றிலும் பொலுபொலென்று விழுவதுபோலிருந்தது. அப்படிப்பட்ட வாண விளையாட்டை அவள் முன்னொரு போதும் கண்டிலள். பெரிய சூரியன் பல வட்டமாய் வேகத்தோடு சுழன்று கொண்டிருந்தது. நெருப்பு மீன்கள் நீலவானை அளாவி ஓடின. குளம்போல் அசைவற்றிருக்கும் கடலில் இவையாவும்பிரதிவிம்பித்தன. மரக்கலம் எங்கும் வெளிச்சமிட்டிருந்தனர். அதனுல் அதிலுள்ள சிறு கயிறுகூடக் கண்ணுக்குத்தெரிந்தது. அம்மரக்கலத்திலேபயணஞ்செய்வோர் ஒவ்வொருவரையும் அவள் காணக்கூடியதாய் இருந்தது. அவருள் அரசிளங் குமரன் சொல்லமுடியாத அழகுடன் விளங்கினன். அன்றியும் புன்சிரிப்போடு ஒவ்வொருவருடனும் கலந்து பேசிக்கொண்டு உவகையோடு உலாவினன். அக்காட்சியையும் அவ்விரவையும மேன்மேலும் அழகு செய்வதுபோலச் சங்கீதமும் எங்கும் பரந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

இரா நெடுநேரம் ஆகிய போதும் அச்சிறுமி அவ்விடத்தை விட்ட கலவில்லை. அவள் கண்கள் அம் மரக்கலத்தை விட்டும் அவ்வழகிய அரசிளங் குமரனை விட்டும் பெயர்ந்தில. பல வண்ணங்களோடு விளங்கிய விளக்குகளும் அணைந்து விட்டன. வாண மத்தாப்புகளும் ஓய்ந்துவிட்டன. பீரங்கி ஒலியும் நின்றுவிட்டது. பேரலைகள் போடும் உறுமல் ஓசையன்றி அவ்விடத்து வேறோர் ஒலியுமில்லை. திரை மிக வேகமாய் அசைந்து கொண்டிருந்தது. எனினும் அச்சிறுமி நீருக்குள்ளே போகாது கடலுக்கு

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

கலைமாணி. க. கணபதிப்பிள்ளை அவர்கள்
இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் ஆக்கியது.

பல நிறங்களுள்ள ஆயிரக்கணக்கான விளக்குகளை மரக்கலமெங்கணும் ஏற்றினர். அவற்றைப் பார்த்தபோது உலகத்திலுள்ள எல்லாத் தேசத்தாரின் கொடிகளும் ஓரிடத்தில் காற்றில் அசைந்துகொண்டிருப்பது போலத் தோன்றிற்று. அச் சிறுமி நீந்திக்கொண்டு அம்மரக்கலத்திலுள்ள ஓர் அறையின் சாளரத் தருகில் சென்றுள். அலை வந்து தன்னை மிதத்தும்போதெல்லாம் அந்தச் சாளரத்தின் கண்ணாடிக்கூடாக அறைக்குள் எட்டியெட்டிப் பார்த்தாள். அங்கு அலங்காரமான உடையணிந்து களிப்போடு உரையாடிக் கொண்டிருக்கும் மக்கட் கூட்டம் ஒன்று இருந்தது. அக்கூட்டத்துள்ளார் யாவரிலும் ஒருவனே மிக்க அழகுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவ ஞானமே வீட்டுக்குச் சாதனம்

## சரியையாதியே அதனைத் தருவதாம்

"சரியையுங் கிரியை யோகஞ் சாற்றிய ஞானமென்ன
விரிதரு பாத நான்கும் விளம்பிய முறைமை கேளாய்
உரைதரு மூன்று ஞான முகித்திடற் கேதுவென்றும்
புரையறு ஞானத்தாலே பொருந்தும் வீ டென்றுங்காணே"

என்று சுப்பிரபோதம் கூறுவதை நாம் சற்று நிதானித்து நோக்கு வோமாயின், சமையலுக்கு நெருப்புப்போல, வீடு கூடுவதற்கு நேர் சாதனமாயுள்ள தத்துவ ஞானத்தைப் பெறுவதற்குச் சரியை கிரியை யோக மென்பன காரணமாயிருக்கின்றன; இவற்றைப் பெறாத போது தத்துவ ஞானத்தைப் பெறுவது கூடாதென்பது நன்கு விளங்குவதாம். சரியை கிரியை யோக மென்பன வற்றுள்ளும் சரியை கிரியைக்கும், கிரியை யோகத்திற்குங்காரணமாம். உயர்நிலையிலுள்ளதொரு மாளிகையை யடைவதற்குப் பல படிகள் சாதனமாயிருப்பதுபோல, எவ்வகையனவாய நிலைகளிலும் மேலாய நிலையினதாய வீடடைவதற்குச சரியை கிரியை யோகம் ஞானமென்பன சாதனமாயிருக்கின்றன. உயர் நிலையிலுள்ள தொரு மாளிகையை யடைவதற்கு, அம்மாளிகையினருகேயுள்ள படி நேர் சாதனமாயிருப்பது போலத், தானறிவானந்த வடிவமாக விளங்கும், வீடடைவதற்குத் தத்துவ ஞானம் நேர் சாதனமாயிருக்கின்றது. இத்தகையதாய ஞானத்தைச், சரியையைக் குறைவற வனுட்டித்து, பின் அதன் பயனாய கிரியையை மேற்கொண்டொழுகி, அப்பால் அதன் பயனாய யோகத்தைக் கைக்கொண் டொழுகினுற் றான் பெறுவது கூடும். இதுபற்றித் தான் தான் தனதென்பதற்றுத் தானறிவானந்த வடிவமாக விளங்கிய தாயுமானுர், "யோகியர்க்கே ஞானமொழுகலாம்" என்றருளிச் செய்தனர்.

உயர் நிலையிலுள்ளதொரு மாளிகையை யடைய விரும்பிய ஒருவன அதற்கமைந்துள்ள படிகளுள், முதற்படியிலேறுவதுபோல, முன னர் நாம் சரியையை யின்றியமையாது மேற்கொண்டொழுகுதல் வேண்டும்; ஒழுகினுற்றான் கிரமங் கிரமமாகக் கிரியை யோக ஞானங்களைப் பெற்று வீடுகூடுவதற்குரியவராவோம். யாதாவதொரு சாதனத்தையு மேற்கொண் டொழுகாது வாய் ஞானம் பேசி வாழ்நாளைக் கழிப்பவர் யாது பயனைப் பெறுதற்குரியவராவர்; அவர் பெறும் பயன் காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வரும் பிறவிக் கடலுள் அழுந்துவதேயாம்.

### பிறவி காரணகாரியத் தொடர்ச்சி

இப்பிறப்பு முற்பிறப்பின் காரியமாயும், இனி வரும் பிறப்பிற்குக் காரணமாயு மிருத்தலி னியல்பை நோக்குவோர்க்குப், பிறவிக் கடல் காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருவதென்பது விளங்காமற்போகாது. இங்ஙனம் காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வரும பிறவிக் கடலுள்,

தென்னாப்பிரிக்கா டர்பன்
திரு. ச. மு, பிள்ளை
அவர்கள வரைவது

நாமழுந்திக் கரையேறுதிருப்பதற்குக் காரணம் யாது? வீடு கூடுவதற்கு நேர் சாதனமாய தத்துவ ஞானத்தைப் பெருமையேயாம். தத்துவ ஞானம், சரியை கிரியை யோகங்களை முறையானே பெற்றொழுகியவர்க்கன்றி யேனையோர்க்குச் சித்தியாவ தின்மையின், நாம் தத்துவ ஞானத்தைப் பெறுவதற்குச் சாதனமாய சரியை முதலிய கருமங்களுள், நமக்குத் தகுதியாயதை நாளைக்குப் பார்த்துக் கொள்ளுவோமென்று கருதாது இன்றே மேற்கொண்டொழுக முற்படல் வேண்டும; முற்பட்டாற்றான், காலக்கிரமத்தில் கால காலனுப் விளங்கும் கருணாநிதியின் கருணைக்குப் பாத்திரமாய்த் தத்துவ ஞானத்தைப் பெறுவது வாயிலாக உத்தம நிலையினை யுறுவதற குரியவராவோம்.

### சரியை யாதி தகுதிக்கேற்ப முயலுக!

தவம், தியானம், தியாகம் (வைராக்கியம்) முதலியவெல்லாம் சரியை கிரியை யோக மென்பனவற்றுள் அடங்குவனவாம்; சரியை முதலிய மூன்றையுங் கிரமமாக மேற்கொண்டொழுகியவர், தவம் தியானம் தியாக முதலிய வெல்லாவற்றையுஞ் செய்தவராவரென்பதற்குச் சிறிதேனும் ஐயப்பாடின்றாம். சுப்பிரபோதம் "தேசுடைத் தவந்தியானந் தியாகமே யோகமாறு, மாசுடைத் துறைத்த மூன்றினடங்கிடும்" என்று கூறுவதால், தவ முதலியன சரியை முதலியவற்றுள் அடங்குமென்பது மாறுபாடின்றி விளங்குமன்றோ? நாம் சரியை கிரியை யோகமென்பனவற்றைச் சாத்திரங் கூறியவாறு மேற்கொண்டொழுகுவோமாயின், தவத்தைச் செய்தவராவோம்; தியானத்தைச் செய்தவராவோம்; தியாகத்தை யுடையவராவோம்; இவை போல் வனவற்றையுமுடைய வராவோமென்பதற்குச் சந்தேகமென்பதுமொன்றுண்டோ? நாம் இவற்றைச் செய்ய வேண்டுமெனின், [illegible] நான் பயன்படா தொழிந்தமைக் காக மனம் வருந்தி, இனி வரும் நாளை நன்னாளாக்கச், சரியை முதலியவற்றுள நந் தகுதிக்கேற்புடையதை மறவாது மேற்கொண்டொழுக விரைந்து முயலுதல் வேண்டும்; இவற்றுள் விரையாது பராமுகமாக விருப்போமாயின், [illegible]

(வரும்)

## அணிந்துரை அரங்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லாண்டு முதலியவற்றிலிருந்து தெரிந்தெடுத்த திருவருட் பாக்களையும ஸ்ரீ இராமகிருஷ்ணர், முகமது நபி, சுவாமி சிவானந்தர், ஆறுமுகநாவலர் முதலியோர் உலகுக்கு உதவிய உறுதி மொழிகளையுந் தன்னகத்தே கொண்டது.

இது வலக்கை கொடுப்பதை இடக்கையே அறியவொண்ணு தென்னும் உயரிய மாண்பைக் கடைப்பிடித்து உதவுவாரா யொனவே அறியத்தராது 1875-ம ஆண்டு தொடை 1953-ம் ஆண்டு மறைந்த உருபயாய் திரு. சி. செலவத்துரை அவர்களின் நினைவு மலராய் வெளிவந்திருக்கும ஓர் சிறந்த இலவச வெளியீடு. மறைந்தவரது மைந்தர் திரு. S. தனபாலசிங்கம் அவர்களே இவ்வுயரிய முன்மாதிரியான செயலைச் செய்தவர். ஏனையோர் பின்பற்றுதற்கு இது ஓர் சிறந்த முன்மாதிரி.

பிரதிகள் வேண்டுவோர் பின் வரும் விலாசத்துக்கெழுதி இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

S. THANABALASINGAM
District Supervisor
National Savings Movement
Urumpirai.

## தீரர மங்கையர்
=0=

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலேயே மிதந்துகொண்டிருந்தனள். மரக்கலத்தின் சாளரக் கண்ணுடியிலேயே அவளுக்குக் கண். இந்நிப்படி இருக்க, பாய்களை ஒவ்வொன்ருய் விரித்து மரக்கலம் அசைந் தசைந்து போகத் தொடங்கியது. இதற்கிடையில் காத்திரவண்ணம் சடுதியாகக் கருமுகில் வானமெங்கும் பரவத்தொடங்கியது. தூரத்தில் மின்னலும் மின்னியது. அத்துடன் அலைகளும் பெருகத் தொடங்கின. இக்காரணங்களினுல் விரைவிற் பெரும் புயலொன்று அடிக்கும்போலத் தோன்றியது இதை அறிந்ததும் மாலுமிகள் மரக்கலத்தின் பாயெல்லாவற்றையும் அவிழ்த்தனர். எனினும் திரை கடுமையாய் மோதியதால் அது புறத்துக்குப் புறம் சரிந்து சரிந்து தத்தளித்துக்கொண்டு வெகு வேகமாய் ஓடியது. பெரிய மலைபோல் அலைகள் எழுந்தன. அவை பாய்மரத்தை ஒருமிக்க மூடிவிடும்போலத் தோன்றியது. ஆனுல் அம் மரக்கலம் ஓர் அன்னப் பறவை கடலில் திரையைக் கிழித்துக் கொண்டு குறுக்கே ஓடுவது போல் விரைந்து சென்றது. ஒவ்வொரு கணமும் திரைகள் அதை நோக்கி வரவா, அவற்றின் உச்சியில் மிதந்துகொண்டு ஓடியது. இக் காட்சியைக் கண்டு ஆனந்தமடைந்தாள். ஆனுல் மாலுமிகளோ கலங்கி ஏங்கிக்கொண்டிருந்தனர். சடுதியில் மரக்கலத்தில் இருந்து ஓர் ஒலி எழுந்தது. இது மரக்கலம திரையோடு மோதுண்டதால் அதன் அடிப்பலகை உடைந்த ஒலி. அதனோடு பாய்மரமும முரிந்து கீழே விழுந்தது. அப்பொழுது மரக்கலம ஒரு பக்கத்துக்குச் சரிந்து ஓடியது. இதனுல் நீர் கோலியது. .... இதைக் கண்ட பின்புதான் அச்சிறுமிக்கு மரக்கலத்துக்கு வந்த அபாயம் விளங்கியது. மரக்கலத்தினது முரிந்த மரத் துண்டுகள் கடலிலே அங்குமிங்கும் பரவத் தொடங்கின. அவற்றில் மோதிக்கொள்ளாமல் தன்னைக் காப்பாற்றிக கொண்டாள். எங்கும இருள் அடர்ந்திருந்தது. அதனுல் அவள் கண்ணுக்கு ஒன்றும புலப்படவில்லை. சற்றிலே ஒரு மின்னல் மின்னியது. அம் மின்னல் ஒளியினுல் மரக்கலத்தில் என்ன நடக்கின்றதென்று கண்டாள். வேறொன்றையும் கவனிக்காது அரசிளங் குமரனையே தேடினுள்! அப்பொழுது மரக்கலம் இரண்டாகப் பிளந்து ஆழத் தொடங்கியது! அதனுடனே அவனும் நீருக்குள் ஆழுவதைக் கண்டாள்! ... ...
.... ... .... .... .... (வளரும்.)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. இராசையா செல்லத்துரையும் மனைவி
2. வலாம்பிகை
வலந்தலை, காரைநகர் வடக்கு-காரைநகர்.
— வழக்காளி,

இல. 8980.

எதிராக.

1. பொன்னையா இரகுபதியும மனைவி
2. புவனேஸ்வரி
மெயின்ஸ்றீற, யாழ்ப்பாணம்.
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 8980ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1953 ஞு சித்திரை மீ 7உ செவ்வாய்க் கிழமை பிற் பகல் 1 மணிதொடக்கம் அந்தக் காணிக் காணிக்குள் நின்று பிரசித்த வலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 29 224ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் 25,000 க்கு 7 வீத வட்டியையும் 8-7-52 — 26-8-52 பின் 5 வீத வட்டி இறுபடும்வரைக்கும் கோட்டுச் செலவு ரூபா 369.71.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக்கோவிற்பற்று சிதாரி முதலாம் பகுதியிலிருக்கும் ஓர் கல் வீடு வளவும் இதன் விசாலம் பர. கி. இல. 3. குளி 5ம் வீடும் செய்பயிரும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும். இந்தப் பரப்பு மூன்று குளி ஐந்துக்கும் எல்லை கிழக்கு துரைசிங்கத்தி னுரிமைக்காரருக்குரிய ஆதனம், வடக்கு றோட்டு. மேற்கு அம்பலவாணர் அருளம்பலத்துக்கும் சங்கரப்பிள்ளை கைம்பெண் காலாக்காலம்மைக்குமுரிய ஆதனம். தெற்கு சிவப்பிரகாச பிள்ளை தம்பையாபிள்ளையின் உரிமைக்காரருககுரிய ஆதனம். இதடங்கலும்.

S. Ratnasabapathy,
Commissioner of Sales.
21-2-53.

M 255 24—2—53.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மனுவேல் அந்தோனிப்பிள்ளையும் மனைவி பிரகாசியும்,
கரையூர், யாழ்ப்பாணம்.
—வழக்காளி,

இல. 9000.

எதிராக

1. வேலுப்பிள்ளை மரியாம் பிள்ளையும் மனைவி
2. மதிலேனு.
3. சந்தியா பிரான்சிஸ்யும் மனைவி
4. மேறி அக்னெஸ்
கரையூர், யாழ்ப்பாணம்.
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 9000ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1953 ஞு பங்குனி மீ 30உ திஙகட்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த வலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 5968ம இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் 5300 க்கு 10 வீத வட்டியையும் 16-7-52— 23-9-52 பின் 5 வீத வட்டி இறுபடும் வரைக்கும் கோட்டுச் செலவு ரூபா 329-82, இதில் ரூபா 750/= நீங்கலாக.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூர் இறை — தவசி தறை குளி $7\frac{15}{16}$ ஷை தவசி தறை குளி $7\frac{15}{16}$ ஆக இரு பிரிவுக்கும் கூடிய குளி $15\frac{14}{16}$ பதினைந்துடன் பதினுறில் பதினுலும் கடையும் வீடுகளும் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு இறப்பியேல் சந்தியாவினுதனம். வடக்கு பேதுரு பெண் எலிசபேத்தின் உரிமைக்காரரினுதனம். மேற்கு டேவிட் றோட்டு தெற்கு றோட்டு இவ்வெல்லைக்குட்பட்ட காணியடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகளும.

S. RATNASABATHY,
Commissioner of Sales
and Valuator.

M. 256 24—2—53.

## இருப்புதரு மனத்தேவன உருக்குங் கொல்லன்

1-ம் பக்கத் தொடர்ச்சி

ராகிய சிவபெருமான் சகல ஆன்மாக்களின் பாசங்களை எல்லாம் ஒருசேரத் தொலைத்து அவற்றை உய்யச் செய்யலாமே எதற்காகப் பக்குவானமாக்களைத் தெரிந்து படிமுறையாக இரட்சிக்க வேண்டும் என்பதே அது. கொல்லன் இரும்பை எடுத்து ஒருமுறை காய்ச்சி அடித்தவுடன் தான் நினைத்த உருவத்தை அமைத்துவிட முடியாது. அது இரும்பின் குறையேயன்றி அவர் குறை அன்று. அன்றி அவன் ஒரு முறையில நன்ருய்ப் பழுக்கக் காய்ச்சி அடிப்பானுனல் அவ்விரும்பு உடைந்து அவன் விரும்பிய உருவம் அமைக்க முடியாது போவதோடு அமையாது அத்த இரும்புக்கும் கேடு விளையும். அதுபோலப் பக்குவமில்லாத ஆன்மாக்களை அநாவது உலக விஷயங்களாற் கட்டுண்டு தம்மையே யறியாது கிடக்கும் ஆன்மாக்களின் பாசங்களை எல்லாம ஒருசேரத் தொலைக்கத் தலைப்பட்டால, டயிற்சிவபத்தான் ஆன்மாக்களின் நோக்கு நிலைத்திருந்த உலக விஷயங்களில பற்றை விடவும் முடியாத தலைவராகிய சிவபெருமானை நோக்கும் நோக்கும இல்லாமல், இப் பிறவியை நீக்கும் பொருட்டுத் தரப்பட்ட உடம்பிற்கும இறுதிவந்தெய்தல் ஒருதலை. ஆனபடியாற்ருன் தலைவராகிய சிவபெருமான் சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய சோபான முறையால் ஆன்மாக்களை இரட்சிக்கின்ருர் என்க.

தலைவராகிய சிவபெருமான் தன்னையாளுமாறு இருக்கருத் துடையதே என்பதைத் திருவாசகத்திலும் திருச்சதகத்தில் "கல்லை மென் கனியாக்கும் விச்சை கொண்டு" எனவும், "இரும்பு நெஞ்சவஞ்சனேனை" எனவும் இன்னும் திருக்கோவையாரிலும் பிறண்டும் எல்லாம் வலியுறுத்தித் தன்னைத் தலைவர் பதம் பதமாக ஆட்கொண்ட தன்மையினையும் பிறவிப் பெருங்கடலில் தன்னை ஆழவிடாது, அவர் தம் பாத மாமபுணையை உதவிய தன்மையினையும் மேலும் மேலும விளக்குகின்ருர். இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து அன்பதில் தரு உவம உருபு. தலையாகிய சிவபெருமான் இரும்பு மனமுடையவர்களை ஒருமுறையல்லப் பலமுறையும் ஈர்த்து அவர் என்பினையுருக்குதல் கரும்புதரு சுவையை அவர்க்குக் கொடுக்க வேண்டி என்பது நன்கு விளங்குகிறதலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்துப்பாட்டின் பண்பு

கிலையாமையைப் பற்றிய குறிப்புகளை மதுரைக் காஞ்சியில் எத்தகைய பொருண்மை வாய்ந்துள்ளன! நெடுநல்வாடையும் நக்கீரரால் யாக்கப்பட்ட பெருமை பெற்றதல்லவா! இதில், வலம்புரிச்சங்கின் சிறப்பும், திங்களும் உரோகிணியும் நீங்காது உறையுமாவன நூற்குறிப்பும் இல்லுறை தெய்வ வணக்கமும் திருவிளக்கேற்றி செல்லும் மலரு தூவி, மக்ளிர் தாயஉள்ளமோடு வழிபடும் காட்சியும் கினைத்தாலும் உள்ளத்தை உருக்கும இயல்புடையதாயிற்றே! குறிஞ்சிப்பாட்டில் பொலிந்துள்ள அகத்துறைப்பொருட்களை மன்னுவதே இன்பந் தருவதாயுள்ளதே. இப்பாட்டிற் கூறிய, தொண்ணூற்றென்பது பூக்களையும் அமைத்து பெருகிலக்கிழவர் ஒருவர், பூங்கா (Park) அமைத்தனராயன் அங்கு முருகப் பெருமானே, வந்து உறைவாரல்லவா! பட்டினப்பாலையிலும், மற்றைய பாட்டுகளிலும், 'பலர் தொழுதெய்

— "தொண்டன்" —

வம என்று கூறியதும்; சேயோன், முருகன், முக்கண்ணன் கோயில்களும், அமணபௌத்தப் பள்ளிகளும், இல்லுறை தெய்வம், காடுறைதெய்வம் என்றெல்லாம், மக்கள் தத்தமக்கு நம்பிக்கையுள்ள தெய்வங்களை வழிபட்டனர் என்பது வெளிப்படையல்லவா! பட்டினம் என்று குறித்த, குலசேகரன் பட்டினம், கொற்கைப் பட்டினம், நாகப்பட்டினம்,சென்னப்பட்டினம், விசாகப்பட்டினம், மசூலிப்பட்டினம் என்னும் ஊர்களின் பெயர்கள் அறியாமையால் பட்டணம் என்று மனம்போனவாறுமாற்றப்படாமலிருந்தால, இவை எல்லாம் தனித்தமிழ்ப் பெயர்கள் என்பது எவ்வளவு தெளிவாய்த் திகழ்ந்து ஒளிரும்! கடற்கரை ஒட்டிய ஊர்களுக்கு, கோடம்பாக்கம், மீனம்பாக்கம் என்னும் பாக்கப் பெயர்கள ஆதியில் தனித்தமிழ்ப் பெயர்களென்று கூறி தமிழைத் தலைகாத்துக்கொண்டிருக்கின்றனபோலும். மலைபடுகடாத்தில், 'மருதம் பண்ணிய கருங்கோட்டு சீறியாழ், நரம்வி மீதிறவாவுடன் புணர்ந்து ஒன்றி விறலியர்' என்றபடி மெல்லிய யாழின் ஓசைக்கு மேற்போகாமல மகளிர் ஆடலும் பாடலும் பண்ணும் ஒருங்கே சேர்த்து நிகழுமாயின் அக் காலத்துக் கூததது, இசைக் கலைகளின் சிறப்புத் தான் என்னே! திருமுருகாற்றுப்படையில் "மலைகிழவோனே" என்றும், மலைபடுகடாத்தில், 'காடுகிழவோனே' என்றும், அறதியிட்டுக் கூறியது எத்தனை பொழுகுவாய்ந்தது!!!

சங்க இலக்கியங்களைக் கற்பது கடினமென்றுவது அல்லது வேறு காரணத்தையிட்டாவது கற்காம லிருப்பது பெருந்தவறு என்பது அடியேனது அனுபவம். பத்துப்பாட்டைப் படியாத தமிழர் பெருங்கலைச் செல்வத்தை யிழந்தவர்களென்றே எண்ண இடந்தருகிறது. பத்துப்பாட்டுப் புலவர்கள் மாத்திரந்தான் படிப்பதற்குரிமை என்று நாம் எண்ணுவது பொருந்தாது. இன்றே தமிழர்களும் தமிழன்பர்களும், பத்துப்பாட்டைப் படிக்கத் தொடங்கவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

## தேடிக் கண்டுகொண்ட தொண்டர்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்' என்ற திருவங்கமாலை முடிவில், முடிவை, மொழிவேந்தர் மொழிந்தருளினர். பின்னும், உள்ளத் திருக்குறுந்தொகையைக் கற்றல் நனறு.

"என்னுளே உயிர்ப்பாய்ப்
புறம் போந்துபுக்கு
என்னுளே நிற்கும்
இன்னம்பர் ஈசனே'
"ஊனில் ஆவி உயிர்க்கும்
பொழுதெல்லாம்
நானிலாவி யிருப்பன்
என்நாதனை"

என்ற வாய்மையை வாகீசரை வணங்கினலன்றி அறிதல் அரிது, அரிது, அரிது, ஊனினுள் உயிரை வாட்டி உணர்வினர்க்கு எளியர், ஞானத்தர் பத்தர் நெஞ்சுள் தேனும் இன்னமுதும் ஆனார்.

வெள்ளெருக் காவம்
விரவுஞ் சடைப்
புள்ளிருக்கு வேளூர்
அரன் பொற்கழல்
உள்ளிருக்கும் உணர்ச்சியில்
லாதவர்
நள்ளிருபர் நரகக்
குழியிலே'

என்றது குறுந்தொகையாயினும வீடு வேண்டுவார்க்கு நெடுந்தொகையன்றே? 'ஆன்மாவி னிடமதாகி உசிர்ப்பெனும் உணர்வு முள்ளார்' என்ற ஒன்றே கடவுளைக் காட்டுமே! சுந்தரமூர்த்தி நாயனர், காணப் பேணுமவர்க்கு எளியானைக் 'கோலக்காவினிற் கண்டுகொண்டேன்' என்றும், 'மனத்து உன்னை வைத்தாய்' 'எத்தான் மறவாதே நினைக்கின்றேன்' என முதலிற் யாறியருளியது நம் உள்ளத்தில் நிலைத்துளதே! 'போய் அகலாமைத்தன்பொன்னடிக்கு என்னைப் பொருந்த வைத்த வேயவனூர்' 'அறிவே நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே' 'அறிவே உன்னை அல்லால் அறிந்து எத்தமாட்டேனே' 'கடியேன் காதன்மையாற் கழற்போதறியா என்னுள் குடியாக் கோயில் கொண் டொளிர்வார்சடை எங்குழகா' 'பொய்யாது என் உயிருட்புகுந்தாய் இன்னம் போந்தறியாய்' நாற்றுனத்தொருவனை நாயனுயபரனை' 'ஓர்ந்தனன் ஓர்ந்தனன உள்ளத்துளளே நின்ற ஒண்பொருள்' 'வன்கைபிடித்து மகிழ்ந்துளே ஆடுவன ஆடுவன்' 'கருத்து ஆர உற்றுளனும்ஒருவனை' 'உள்ளத்துப் பொருள் பற்றினன்' மாணிக்கவாசகர் 'நிச்சம் எனநெஞ்சில் மன்னியானுகி நின்றான்' உடையாள் உன்றன் நடுவிருக்கும உடையாள் நடுவுள் நீ இருத்தி அடியேன நடுவுள் இருவீநும் இருப்பது' என்றருளிய மெய்யநுபவத்தை அன்பிருந்து அநுபவித்து இன்புற விரும்பினுல் இன்றும் பெறலாம்.

## திருமுழுப்பாலுற்சவம்

வண்ணை - வைத்தீயேசுவரசுவாமி கோவிலில் சென்ற மாதம் புனராவர்த்தன சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் ஆகி இப்போது 27நாட்களாக மண்டலாபிஷேகம் நடந்து வருகின்றது. சென்ற வெள்ளிக்கிழமை இரவு கார்த்திகை நக்ஷத்திரமானதால் முத்துக்குமாரசுவாமிக்கு விஷேட அபிடேகம் செய்து சந்தன அங்கி தூக்கப் பெற்றுச் சோட சோபசார பூசை ஆனது. பின் குமாரமூர்த்தி அருட்சத்திகள் சகிதம் உலக மாதாவாகிய வாலாம்பிகை சந்நிதிக்கு எழுந்தருளிப் பால் நைவேத்தியம் செய்யப் பெற்றார். பாலஸ்தாபனம் செய்யப்பெற்றிருந்த பத்து வருஷ காலம் இத் தரிசனம் கிடைக்கப்பெறுது இன்று கிடைத்தமையால் பன்னூற்றுக்கணக்கான அன்பர்கள் தரிசித்துப் பாலமுதம் பெற்று இன்புற்றனர். தொன்மைபோல் இவ்வுற்சவம் ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நக்ஷத்திரந்தோறும் நடைபெறும்.

## அரசாங்கக் கேள்விப் பத்திரங்கள்

### கச்சேரி—யாழ்ப்பாணம்

N. 503. 1 - 4 - 53 தொடக்கம் 30 - 11 - 53 வரை யாழ்ப்பாணம், சிவியாதெரு உப்பளங்கட்டு பனைமரக்கப்புகள், வடலி ஓலைகள், பனை மட்டைகள், அலம்பல்கள் ஓலைப்பாய்கள், நார்க்கடகங்கள் முதலியவற்றைக் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் வடமாகாண அதிபரால் 6.3.53 நடுப்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

முழுவிபரங்கட்கு 20 - 2 - 53 இராசாங்க வர்த்தமானி (கசற்)யின் 1-ம் பாகம், 2 ம் பிரிவைப் பார்க்க இதன் பிரதிகள் சகல தபாற்கந்தோர்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

G 59 24—2—53.

## அறிவித்தல்

ஒஸ்றின் (Austin) 7 — X இலக்கம். இயந்திரம் அமைப்பு - கூடாரம் யாவும் நல்ல நிலையில் புது மின்சாரசத்திப் பெட்டி உடையது. (Battery)

R. S. கந்தையா
தலைமைக்காரன்
தும்பளை
பருத்தித்துறை,

M. 254 20, 24—2—53.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆூ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா]
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



மூலவியாதி அறவே அகற்றப்பட வேண்டுமானுல்

பழனி, சி. எம். சாமி,

நாகபஸ்பம் | கருணைலேகியம்

... உபயோகியுங்கள் ...

- நாட்பட்டதானுலும ஆப்பரேசனின்றிக் குணப்படுத்த இயலும்.
- மூலச் சூடு, மூல முளை, இரத்த மூலம், மல பந்தம், ஆசனத்துவாரத்தைச்சுற்றிலும் கொப்பளமுண்டாகுதல் முதலியன குணமாகின்றது.

| | |
|---|---|
| 24 வேளை பஸ்பம் புட்டி 1க்கு ரூ 5-0-0 | கருணை லேகியம் அரைசேர் புட்டி ரூ. 2-8-0 |

ஏஜண்டு: S. பொன்னுச்சாமி பிள்ளை,
133 தும்பகொடா தெரு, பலாங்கொடை,

* * * (௨)

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.


கற்றோர்க்கழகு கசடற மொழிதல்


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்

திறமான குணிமார்க்ஓடுகள் 13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சோகரம் இ. கனேஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press. Vannarponna, Jaffna on Tuesday! February 24. 1953.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org